# ஆற்றூர் என்.வி.கே.எஸ்.டி., கல்வியியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

மார்த்தாண்டம், பிப்.27–

ஆற்றூர் என்.வி.கே. எஸ்.டி., கல்வியியல் கல்லூரியில் 58வது பட்டம் அளிப்பு விழா நடைபெற்றது.

விழாவிற்கு கல்வி குழுமத்தின் செயலாளர் வக்கீல் கிருஷ்ணகுமார் தலைமை வகித்தார். திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகப் பதிவாளர் டாக்டர் சாக்ரடீஸ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, கடந்த மூன்று கல்வி ஆண்டிற்கான பி.எட்., மற்றும் எம்.எட்., மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

கல்லூரி முதல்வர் டாக்டர் ஸ்ரீலதா செயல்பாடு அறிக்கையை சமர்ப்பித்து பட்டமளிப்பு நாள் உறுதி மொழியை வாசித்தார்.



ஆற்றூர் என்.வி.கே.எஸ்.டி., கல்வியியல் கல்லூரியில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

கல்லூரியின் தேர்வு கட்டுப்பாட்டாளர் டாக்டர் தேவிகா முன்னிலை வகித்தார். துறை தலைவர்கள் கிரீஷ் குமார், பவித்ரா குமார், பிரவீன்குமார், ரெஜீ எம்.கே.நாயர், பிரசோப் மாதவன் மற்றும் முதுகலை துறைத்தலைவர் ராகி பி.நாயர் ஆகியோர் சம்பந்தப்பட்ட துறையை சேர்ந்த மாணவர்களின் பெயர்களை வாசித்தனர்.

200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பட்டம் பெற்றனர். நிர்வாக உறுப்பினர்கள், கல்லூரியின் முன்னாள் முதல்வர் முகுந்தன், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.